**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.047** **நாள்: 07.02.2023**

**சோழிங்கநல்லூர் மண்டலத்திற்குட்பட்ட ஈஞ்சம்பாக்கம் அரிச்சந்திரா சாலையிலுள்ள இந்து ஊரூர் மயானபூமியில் பராமரிப்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதால், பொதுமக்கள் கந்தன்சாவடி மற்றும் பெசன்ட் நகர் எரிவாயு தகனமேடைகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி அறிவிப்பு**

பெருநகர சென்னை மாநகராட்சி, சோழிங்கநல்லூர் மண்டலம், வார்டு-194க்குட்பட்ட ஈஞ்சம்பாக்கம் அரிச்சந்திரா சாலையிலுள்ள இந்து ஊரூர் மயானபூமியில் உள்ள எரிவாயு தகனமேடையினை மின் மயானபூமியாக மாற்றுவதற்காக, 02.12.2022 முதல் 07.02.2023 வரை மயானபூமி இயங்காது என ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது.

தற்பொழுது மேற்கண்ட மயானபூமியில் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதால், 08.02.2023 முதல் 07.03.2023 வரை மயானபூமி இயங்காது. எனவே, பொதுமக்கள் பெருங்குடி மண்டலம், வார்டு-182க்குட்பட்ட கந்தன்சாவடி மற்றும் அடையாறு மண்டலம், வார்டு-174க்குட்பட்ட பெசன்ட் நகர் எரிவாயு தகனமேடைகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**